*அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 1/2004*

*எனது இல: தா*
*அரசாங்க நிர்வாக முகாமைத்துவ,*
*மறுசீரமைப்பு அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 07*
*2004-02-27*

*சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,*
*மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும்*
*திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.*

## 2004 பாராளுமன்றத் தேர்தல் மற்றும் வடமேல் மாகாண சபை வாக்கெடுப்புகளை நடாத்துவதற்காக வேண்டிய பணிற்றொகுதி

*2004 ஏப்பிரல் மாதம் 02 ஆந் திகதி நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலின் போது தேர்தல் ஆணையாளருக்கும் கடமை பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கும் மாகாண அரச சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உட்பட அணைத்து அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களினதும் உதவி இன்றியமையாதது. தேர்தல் கடமைகளுக்காக இனம் காணப்படும் உத்தியோகத்தர்கள் மட்டுமல்லாமல் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் தேவைப்படும் போது சேவையில் ஈடுபடுத்துவதற்காக தயாராக இருக்க வேண்டும்.*

*02* *2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாத இறுதியில் நடாத்தப்படவிருக்கும் வடமேல் மாகாண வாக்கெடுப்பு கடமைகளுக்கு இனங்காணப்படும் உத்தியோகத்தர்களையும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக தயாராக இருக்க வேண்டும்.*

*03* *ஆகையால் பின்வரும் வழிமுறைகளை கையாள வேண்டியுள்ளது.*

*(அ)* *2004-03-08 இருந்து 2004-04-06 ஆந் திகதி வரையிலான அரச சேவையை அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை அனுமதிக்கப்படலாகாது என்பதுடன், இக் காலத்திற்காக தற்போது விடுமுறை அனுமதிக்கப்பட்டிருந்தால் அவ் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும். உத்தியோகத்தர் ஒருவரின் சுகவீனம் போன்ற மிக விசேடமான ஒரு விடயம் சம்பந்தமாக விடுமுறை வழங்கும் போது தனிப்பட்ட முறையில் தொடர்புடைய அமைச்சின் செயலாளர் அல்லது மாகாண சபை தலைமைச் செயலாளர் அதை தீர்மானிக்க வேண்டும்.*

(ஆ) வடமேல் மாகாண வாக்கெடுப்பு கடமைகளுக்கு இனங்காணப்படும் அலுவலர்கள் தொடர்பில் மேற்படி வரையறைகள் 2004-04-30 வரை வலுவிலிருக்கும்.

(இ) வெளிநாட்டு தூதுக்குழுக்களுடன் அலுவலக பேச்சுவார்த்தை நடாத்துதல், மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை ஏற்பாடு செய்யும் போது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் அலுவலர்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு தடை ஏற்படாதவாறு அவற்றை ஏற்பாடு செய்வதற்கு சகல அமைச்சுக்களும் மாகாண சபைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ) ஏதேனும் மிக முக்கியமான தனிப்பட்ட தேவைக்காக ஒரு நாள் அல்லது இரு நாட்கள் அளவு குறுகிய காலத்திற்கு விடுமுறை தேவைப்படுமாயின் தேர்தல் நியமனக் கடிதங்களை பொறுப்பேற்பதற்கு தபாலில் வாக்களிப்பதற்கு ஆலோசனை வகுப்புகளில் கலந்து கொள்வதில் தடையேற்படாதவாறு திணைக்களத் தலைவரின தற்றுணிவின் படி விடுமுறை அனுமதிக்கலாம்.

(உ) 2004-03-08 இருந்து 2004-04-30 வரையிலான காலத்தினுள் அரசு சேவை உத்தியோகத்தர்களினது இடமாற்றங்களை இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

04 தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசித்த பின் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: எச்.சீ.மான்னப்பெரும,<br>
செயலாளர்,<br>
அரசாங்க நிர்வாக முகாமைத்துவ<br>
மறுசீரமைப்பு அமைச்சு.